www.nammakalvi.com



*உரைநடை உலகம்*

# இயல் ஒன்பது
# விரிவாகும் ஆளுமை

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

விடை: ஆ) மலையுச்சி

2. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை .............

அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்

இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

விடை: ஈ) ஒன்றே உலகம்

### குறுவினா

1. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோருக்கும் உள்ள வேறுபாடு யாது?

**உரோம நாட்டவர் :** உரோமையரின் சான்றோர் எழுதும்போது நாம் நம்மவர் என்ற செருக்குடன் உரோமரை கருதியே எழுதுகின்றனர்.

**தமிழ்ச் சான்றோர் :** எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய கொள்கையை தம் நூல்களில் யாத்துள்ளனர் என்பதே இரு சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

### சிறுவினா

1. உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?

ஒழுக்கவியலை நன்கறிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும் போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுள்களை உலக இலக்கியத்தில் காண்பது அரிது என்பார்."

**அவர் குறிப்பிட்ட அரிய கருத்துகள்:**

- மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்.
- பிறப்போ சாதியோ சமயமோ மக்களை உயர்த்தவோ, தாழ்த்தவோ, முடியாது. இத்தகைய கொள்கைகள் வள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளன என்று வியக்கிறார்.

**2. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.**

கோர்டன் ஆல்போர்ட் ஓர் உளநூல் வல்லுநர். அவர் கூறும் மூன்று இலக்கணங்களாவன.

- மனிதன் தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும்.
- பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறோம் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருக்க வேண்டும்.
- ஒருவன் அவனது வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டுபிடித்து நடத்தல் வேண்டும்.

## நெடுவினா

**1. தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகள் வழி நிறுவுக.**

**முன்னுரை:**

உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் சான்றாண்மைத்தன்மை. இச்சான்றாண்மைப் பண்பு பண்டைத் தமிழ்ப் புலவர்களால் பாராட்டி பாடப்பட்டுள்ளது. நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைப் பண்புகளை அறியலாம்.

**யாதும் ஊரே யாவரும் நம்மவரே:**

கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் சான்றாண்மைக் கொள்கையை இக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் கூறியுள்ளார்.

'யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவர்' என்று திருக்குறளும் நம் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரையைக் கூறியுள்ளது. ஊர், நாடு, கேளிர் என்னும் இச்சொற்கள் பரந்த மனப்பான்மை மனித நலக் கோட்பாடு என்னும் சான்றாண்மையை வலியுறுத்துகிறது

**இலட்சியங்களைக் கடைப்பிடித்தல்:**

இலட்சியங்களைக் கடைப்பிடிக்கும் சமுதாயம் உயரும். குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சி அடையும். குறிக்கோள் இல்லாத மனிதன் வெறும் சதைப்பிண்டம் என்பதை, "பூட்கையில் லோன் யாக்கை" போல என்று புலவர் ஒருவர் புறநானூற்றில் கூறுகிறார். குறிக்கோள் வேண்டும் என்பதை வள்ளுவம் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்று குறிப்பிடுகிறார்.

**பிறர் நலவியலும் ஒற்றுமை உணர்ச்சியும்:**

பிறர் நலத்துக்காகப் பணி செய்வதில் தான் ஒருவனுடைய வாழ்க்கை பண்புடைய வாழ்க்கை ஆகிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையைப் பின்பற்றினர் தமிழர். இச்செய்தி தமிழ்ச் சான்றோர் தன்னலம் தேடுவதில் இருந்து விடுவித்துப் பிறர் நலம் பேணுவதில் தான் சிறந்தனர் என்பதை உணர்த்துகின்றது. மக்கள் அனைவரும் தன் இனத்தவர் எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டும் என்ற உயரிய சான்றாண்மைப் பண்பை பெற்றிருந்ததையும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**ஒற்றுமை உணர்வு:**

பாணர்களும் பாடினிகளும் தமிழ்ப் புலவர்களையும் அரசர்களையும் மக்களையும் நாட்டையும் வேறுபாடு இன்றி பாடியதால் தமிழகம் என்ற ஒற்றுமை உணர்வை உருவாக்கினர். பிறர்

www.nammakalvi.com



நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலை ஒருவருக்கு ஒருவர் உதவுதல் ஆகிய அவர் தம் அன்பையும் ஒற்றுமை உணர்வையும் பறைசாற்றுகின்றன.

**நன்மை செய்தல்:**

தமிழ்ச் சான்றோர்களின் இன்றியமையாப் பண்பு, நன்மையை நன்மைக்காக செய்வதுதான் பிறர் போற்றுவார்கள் என்றோ, வேறு நலன்களைப் பெறலாம் என்றோ தமிழர் நன்மைகளைச் செய்யவில்லை என்பதற்குக் கடையெழு வள்ளல்களுள் ஒருவரான "ஆய்" சான்றாவான்.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவினை வணிகன் ஆய்அலன்", என்று புறநானூறு பாராட்டுகிறது.

பிறர்க்காக நன்மை செய்து வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும் "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இப்பண்பையே எடுத்துக்காட்டுகிறது.

**முடிவுரை:**

இவ்வாறு நம் இலக்கியங்கள் நம் தமிழ்ச் சான்றோர்களின் பண்புகளையும் மக்கட் தன்மையை வளர்க்க முனைந்ததையும் உலகமெல்லாம் தழுவுவதற்கும் உரிய பண்புகளை வளர்த்தனர் என்று தனி நாயக அடிகள் தம் கட்டுரை வாயிலாக நிறுவுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடியவர் யார்?**

அ) கபிலர் ஆ) வள்ளுவர் இ) கணியன் பூங்குன்றனார் ஈ) ஔவையார்

விடை: இ) கணியன் பூங்குன்றனார்

**2. நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று – என்ற கூற்றை கூறியவர்**

அ) ஹாக்கின்ஸ் ஆ) ரஷல்லி இ) வேட்ஸ்வொர்த் ஈ) தெறென்ஸ்

விடை: ஈ) தெறென்ஸ்

**3. புலவர் தெறென்ஸ் எம்மொழிப் புலவர்?**

அ) ஆங்கிலம் ஆ) பிரெஞ்சு இ) இலத்தீன் ஈ) அரபு

விடை: இ) இலத்தீன்

**4. முதிர்ந்த ஆளுமைக்கான இலக்கணம் கூறியவர் யார்?**

அ) ஹாக்கின்ஸ் ஆ) கோர்டன் ஆல்போர்ட்
இ) தெறென்ஸ் ஈ) ஷெல்லி

விடை: ஆ) கோர்டன் ஆல்போர்ட்

**5. "பூட்கையில்லோன் யாக்கை போல" இத்தொடரில் 'பூட்கை' என்பதன் பொருள் யாது?**

அ) எல்லை ஆ) வாழ்க்கை இ) நட்பு ஈ) குறிக்கோள்

விடை: ஈ) குறிக்கோள்

www.nammakalvi.com



**6. குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப் பிண்டம் என்று கூறிய புலவர் யார்?**

அ) கூடலூர் கிழார் ஆ) ஆலந்தூர் கிழார்
இ) ஆலந்தூர் மோகனரங்கன் ஈ) கபிலர் விடை: ஆ) ஆலந்தூர் கிழார்

**7. ஒழுக்கவியலை நன்கறிந்து எழுதிய உலகமேதை யார்?**

அ) ஆல்பர்ட் சுவைட்சர் ஆ)கோர்டன் ஆல்போர்ட்
இ) தெறென்ஸ் ஈ) ஹாக்கின்ஸ் விடை: அ) ஆல்பர்ட் சுவைட்சர்

**8. கங்கையையும், இமயத்தில் பெய்யும் மழையையும் உவமைகளாக எடுத்துக் கூறும் நூல் எது?**

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல்
விடை: ஆ) புறநானூறு

**9. "Sapens" என்பதன் பொருள் யாது?**

அ) அறிவற்றவன் ஆ) புத்தியில்லாதவன் இ) முட்டாள் ஈ) அறிவுடையோன்
விடை: ஈ) அறிவுடையோன்

**10. தனிநாயக அடிகள் தொடங்கி நடத்திய இதழ் எது?**

அ) தென்றல் ஆ) குயில் இ) தமிழ்ப்பண்பாடு ஈ) தமிழ்க்கலச்சாரம்
விடை: இ) தமிழ்ப்பண்பாடு

**11. உலகத்தமிழாய்வு மன்றம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகக் காரணமாக இருந்தவர் யார்?**

அ) அமுதன் அடிகள் ஆ) குன்றக்குடிகள் அடிகள்
இ) தனிநாயக அடிகள் ஈ) ஞானியாரடிகள்
விடை: தனிநாயக அடிகள்

**12. 'விரிவாகும் ஆளுமை' – என்னும் உரைநடைப் பகுதி தனிநாயகம் அடிகளால் எங்கு நிகழ்த்தப்பட்ட உரை?**

அ) யாழ் பல்கலைக்கழகம் ஆ) சிக்காகோ
இ) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஈ) தில்லி பல்கலைக்கழகம்
விடை: அ) யாழ் பல்கலைக்கழகம் (இலங்கை)

**13. மார்க்ஸ் அரேலியஸ் என்பவர் __________.**

அ) தத்துவஞானி ஆ) பேரரசர் இ) விஞ்ஞானி ஈ) கவிஞர்
விடை: ஆ) பேரரசர்

**14. செனக்கா என்பவர் __________.**

அ) தத்துவஞானி ஆ) பேரரசர் இ) விஞ்ஞானி ஈ) கவிஞர்
விடை: அ) தத்துவஞானி

**15. நாம், நம்மவர் என்ற செருக்கோடு எழுதுபவர்கள் __________.**

அ) உரோமர் ஆ) தமிழர் இ) கிரேக்கர் ஈ) இந்தியர்
விடை: அ) உரோமர்

www.nammakalvi.com



16. 'உள்ளற்க உள்ளம் சிறுகுவ' என்று கூறும் நூல் ________.

அ) நாலடியார் ஆ) திருக்குறள் இ) பழமொழி நானூறு ஈ) புறநானூறு

விடை: ஆ) திருக்குறள்

## குறுவினா

1. **பண்டைக்கால தரும சாத்திர நூல்கள் பிறரைக் கவனத்தில் கொள்ளாமைக்கான காரணம் யாது?**
விந்திய மலைத்தொடருக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி, வீடுபேறு அடைவதற்கு அப்பூமியிலே பிறந்திருக்க வேண்டும் என்னும் கருத்தால் பண்டைக்கால தருமசாத்திர நூல்கள் பிறரைக் கவனத்தில் கொள்ளவில்லை.

2. **ஸ்டாயிக் விதிகளின் நம்பிக்கை யாது?**
   - மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்.
   - பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ, உயர்த்தவோ முடியாது.

3. **பிறர் நலக்கொள்கையைப் பரப்புவதற்குக் காரணமாயிருந்தவர்கள் யாவர்?**
   - தமிழ்நாட்டுப் பாணர்
   - புலவர்

4. **புலவர்கள் நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகக் கூறும் இடங்கள் யாவை?**
குமரி ஆறு, காவிரி ஆறு போன்ற மணல் நிறைந்த இடங்களை நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகப் புலவர்கள் கூறுகிறார்கள்,

5. **திருக்குறளில் பூட்கைமகன் அல்லது குறிக்கோள் மாந்தனின் இயல்புகளாகக் கூறப்படுவன யாவை?**
   - பிறர்பால் அன்புடைமை எனும் கருத்து மற்றும்
   - இல்லற வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந்தோம்பல் போன்ற பண்புகளில் ஆளுமையை வளர்த்தல் ஆகும்.

6. **செனக்கா என்னும் தத்துவ ஞானியின் கருத்தினை எடுத்தியம்புக.**
   - எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு
   - நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்று கருதுவதே செனக்கா என்னும் தத்துவ ஞானியின் கருத்தாகும்.

7. **தான் உலகிற்கு உரியவன் என்பதை மார்க்ஸ் அரேலியஸ் எங்ஙனம் கூறுகிறார்?**
   - நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்.
   - நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்.
   - நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன் என்று மார்க்ஸ் அரேலியஸ் கூறியுள்ளார்.

8. **குறிக்கோளை அடைவதற்கு திருவள்ளுவர் கூறும் இரண்டு அறிவுரைகளை எழுதுக.**
   - உள்ளற்க உள்ளம் சிறுகுவ (798).
   - உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் (596).

www.nammakalvi.com



## சிறுவினா

**1. சீன நாட்டின் தத்துவ ஞானிகளைக் குறிப்பிடு.**

- சீனநாட்டில் கி.மு. 604ம் ஆண்டில் பிறந்த லாவோட்சும்
- கி.மு. 551–479 காலத்தில் வாழ்ந்த கன்பூசியசும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**2. முதிர்ந்த ஆளுமைக்குரிய மூன்று இலக்கணங்கள் யாவை?**

- தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்.
- பிறருடைய நலத்திற்கும், இன்பத்திற்கும் பாடுபடக் கூடிய வகையில் ஆளுமையில் விரிவு பெற்றிருக்க வேண்டும்.
- தன் வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்.

**3. திருக்குறளைப் பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் கூறுவது யாது?**

"உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலே காண்பது அரிது" என்று கூறுகிறார்.

**4. 'பண்புடைமைக்குப்' பரிப்பொருமாள் கூறும் இலக்கணம் யாது?**

பண்புடைமையாவது: யாவர் மாட்டும் அவரோடு, அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும் பழி நாணலும் முதலான நற்குணங்களை உடைமையே பண்புடைமை ஆகும் என்று கூறுகிறார்.

**5. திருக்குறளுக்கும், ஸ்டாயிக்வாதிகளுக்கும் உள்ள பொதுவான தன்மை யாது?**

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு, உயிர்கள் அனைத்தையும், மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று, கருதும் பண்பு திருக்குறளுக்கும், ஸ்டாயிக்வாதிகளுக்கும் உள்ள பொதுவான தன்மையாகும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 236

**1. உங்களுக்குப் பிடித்த தமிழ் ஆளுமைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்புகளை எழுதுக.**

- பூமிப்பந்து எங்கும் புகழ் பெற்றுத்திகழும் தமிழ் ஆளுமை காமராசர் ஆவார்.
- ஆளுமை என்பது என்னவென்றால் ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள், ஆகியவை உள்ளிருந்து உருவாகி வாழ்க்கைக்காலம் முழுவதும் அவை சீராக அமைவதே ஆளுமை ஆகும்.
- இவ் உரைநடையில் கற்றது போல் பிறர்நலம் பேணுதல், தியாகமும் நேர்மையும் ஆளுமை என்றால் காமராசர் சிறந்த ஆளுமை பண்பு உடையவரே.
- தனது கஷ்டங்களைப் பொருட்படுத்தாது, சதாகாலமும் நாட்டின் நலனில் ஈடுபட்ட உள்ளத்தைப் பெற்றவர். தர்ம சிந்தனையும், நீதியும் உடையவர்.
- மக்களுக்குத் தொண்டு செய்ய நீண்டகாலம் வாழவேண்டும் என்று வாழ்த்தப்பட்டவர்.
- காமராசர் மக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு தீர்ப்பதில் வல்லவர், நாட்டம் உடையவர் என்று இந்தியாவிலேயே பெருமையாகப் பேசப்பட்டவர்.
- மூவேந்தர் ஆட்சிக்காலத்தில் கூட நிகழாத அற்புதத்தைத் தமிழகத்தில் நடத்தியவர் என்று பெரியாரே புகழ்ந்துள்ளார்.

www.nammakalvi.com



- கல்விப் புரட்சியும், சமூக நீதிக்கான புரட்சியும் நடத்திக் காட்டியவர்.
- இவரது பொதுவாழ்க்கை நேர்மை, எளிமை, தூய்மை என்னும் தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. கறைபடியாத கரங்களை உடையவராகத் திகழ்ந்தார்.
- தோழர்களே நம் நாடு உருப்பட வேண்டுமானால் குறைந்தது இன்னும் பத்து ஆண்டுகளுக்காவது காமராசரைப் படித்துக் கொள்ளுங்கள்; விட்டுவிடாதீர்கள். அவரது ஆட்சி மூலம் சுகமடையுங்கள். "காமராசரைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேறு ஆளு சிக்காது" என்று 82 வயதான தந்தை பெரியாரால் பாராட்டபட்டார். எனில் காமராசரை விட சிறந்த ஆளுமை உண்டோ!

**2. உலகத் தமிழ் மாநாட்டு மலர், பொங்கல் மலர், தீபாவளி மலர், போன்றவற்றில் வெளிவந்துள்ள உலகப் பொதுவியல் சிந்தனைகள் குறித்து 5 மணித்துளிகள் பேசுக.**

அனைவருக்கும் வணக்கம்.

பொங்கல் மலர் ஒன்றில் புதிய சிந்தனைகள் நிறைந்த கருத்தடங்கிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

இளமை நிலையற்றது, வாழ்வு நிலையற்றது. இளமை என்பது அழகு இல்லை அது ஒரு பருவம், அப்பருவத்தில் நன்மை செய்பவர்களாய் நாம் வாழவேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தியது.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று உலகுக்கு உணர்த்தியவன் தமிழன். பண்டைய தமிழன் சிறந்த உலகப்பொதுமை சிந்தனை உடையவனாக இருந்தான்.

நரையும் மூப்பும் வரும் என்பதை முன்னரே உணர்ந்து காமம், வெகுளி, மயக்கம் என்று கிடைக்காமல் நன்மை செய்யுங்கள் நன்மையே உங்களை நன்னெறிக்கு இட்டுச்செல்லும். அனைத்து உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணுங்கள்.

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்" நாகரிகம் எனப்படா.

அனைத்து உயிர்களிடத்தும் உயிர்நேயம் உடையவனே நாகரிகம் உடையவன்.

குளிர்ச்சியான சோலையில் காய்த்திருக்கும் காய்கள் கனிந்தவுடன் உதிர்ந்து விடுவது போல், வாழ்வும் உதிர்ந்துவிடும் தன்மையது. எனவே வாழும்போதே, "மற்று அறிவோம் நல்வினை" என்பதை உணர்வோமாக.

அறிவுடையோர் இவ்வுண்மையை உணர்ந்து கொள்க! இந்த உண்மையை உணராதவரை அறிவில்லாதவர் என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

"தோறார் விழியிலா மாந்தர்" என்கிறார்.

இளமை கழிந்து போகுமுன் அருமையான அறச்செயல்களைச் செய்து விட வேண்டும். முதுமையில் எண்ணினாலும், அருஞ்செயலை செய்வதற்குரிய ஆற்றல் இல்லாது போய்விடும், எண்ணும் உலகளாவிய பொதுவியல் சிந்தனையைக் கூறும் இக்கட்டுரை, என் மனதை மாற்றியது. இச்சொற்பொழிவைக் கேட்ட நீவிரும் அறம் செய்ய முயல்க.

**நன்றி வணக்கம்!**

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

# இயல் ஒன்பது
# அக்கறை

### நுழையும் முன்:

- பாரதியின் வசனகவிதைகளின் தொடர்ச்சியாக வந்ததே புதுக்கவிதை.
- புதுக்கவிதைகள் மனிதநேயத்தை வலியுறுத்துவதாக இருக்கின்றன.
- பரபரப்பான இந்த நூற்றாண்டுகளின் வாழ்வின் நெருக்கடியில் மனிதம் சிக்கி விடக்கூடாது என்பதைப் புதுக்கவிதைகளின் வாயிலாகக் கவிஞர் பலர் பல பரிமாணங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். கல்யாண்ஜி கவிதைகளிலும் மனிதம் பரவலாக வலியுறுத்தப்படுகிறது.

### ஆசிரியர் குறிப்பு:

- கல்யாண்ஜி என்ற புனைபெயரில் கவிதைகளும், வண்ணதாசன் என்ற புனைபெயரில் சிறுகதைகளும் எழுதும் இவரது இயற்பெயர் சி. கல்யாணசுந்தரம் என்பதாகும். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்தார். இவரது தந்தை இலக்கியவாதி தி. க. சிவசங்கரன் ஆவார்.
- கவிதையில் மட்டுமல்ல சிறுகதை எழுதுவதிலும் பேரும்புகழும் பெற்ற வண்ணதாசன் 1962 முதல் முதலில் ‘தீபம்’ இதழில் எழுதத் துவங்கியவர் இன்று வரை எழுதி வருகிறார்.

### இவர் எழுதிய கவிதை நூல்கள்:

- புலரி
- முன்பின்
- ஆதி ஆகியவையாகும்.
- அந்நியமற்ற நதி
- மணல் உள்ள ஆறு

### கட்டுரைத் தொகுப்பு:

அகமும் புறமும்.

### கடிதத் தொகுப்பு:

சில இறகுகள் சில பறவைகள்.

### சிறுகதை நூல்கள்:

- கலைக்க முடியாத ஒப்பனைகள்
- உயரப்பறத்தல்
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்
- ஒளியிலே தெரிவது
- ஒரு சிறு இசை போன்றவை குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்புகள் ஆகும்.

### பெற்ற விருதுகள்:

- ஒரு சிறு இசை நூலுக்காக 2016 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது.
- 2016 ல் விஷ்ணுபுரம் விருது.
- 2016 ஆம் ஆண்டு சுஜாதா விருது ஆகியவை ஆகும்.
- 2018 ல் கனடா நாட்டின் தமிழ் இலக்கியத் தோட்டம் என்னும் அமைப்பு வழங்கிய “வாழ்நாள் சாதனையாளர் விருது”.

www.nammakalvi.com



## நசுங்கும் மனிதநேயம்

- மிதிவண்டி கூடையிலே தக்காளிப் பழங்களை ஏற்றி வருகின்ற வியாபாரி, சமநிலை தவறி கீழே விழுகின்றார்.
- கூடையில் இருந்த தக்காளிப் பழங்கள், பழுத்தும், பழுக்காதவைகளுமாக இருக்கின்றன. முக்கால் சிவப்பில் இருக்கும் தக்காளிப் பழங்கள் சாலையில், தரையில் நடைபாதைகளில் என அனைத்துத் திசைகளிலும் உருண்டன.
- வியாபாரியும் விழுகின்றார், கூடையும் விழுந்து சரிந்து, பழங்களும் சிதறின.
- பரபரப்பான சாலையில் உதவி செய்ய எவரும் இல்லை. அவரவர் தலைக்கு மேல் வேலை இருப்பதாய், ஒரு நொடிப்பொழுதும் வீணாகி விடக்கூடாது எனக் கடந்தும் நடந்தும் செல்கின்றனர்.
- காலடியிலும், கடந்து செல்லும் வண்டிகளிலும் சிக்கிய பழங்கள் ஒவ்வொன்றாக நசுங்குகின்றன. இக்காட்சியைக் கண்டு, பழங்களை விடவும் மிகவும் நசுங்கி போனது, சக மனிதர்கள் மீது கொண்டிருக்கின்ற அக்கறையும், மனித நேயமும் என்று வருந்துகிறார் கவிஞர்.

### இலக்கணக் குறிப்பு:

| | | | |
|---|---|---|---|
| **உருண்டது** | – ஒன்றன்பால் வினைமுற்று | **போனது** | – ஒன்றன்பால் வினைமுற்று |
| **சரிந்தது** | – வினையெச்சம் | **அனைவரும்** | – முற்றும்மை |
| **கடந்தும் நடந்தும்** | – எண்ணும்மை | | |

### பகுபத உறுப்பிலக்கணம்:

**சரிந்து – சரி + த்(ந்) + த் + உ**

| | |
|---|---|
| சரி | – பகுதி |
| த்(ந்) | – சந்தி ந் ஆனது விகாரம் |
| த் | – இறந்தகால இடைநிலை |
| உ | – வினையெச்ச விகுதி |

**போனது – போ + இ(ன்) + அ + து**

| | |
|---|---|
| போ | – பகுதி |
| இ(ன்) | – இறந்தகால இடைநிலை |
| அ | – சாரியை |
| து | – வினையெச்ச விகுதி |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்**

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

விடை: அ) ஒரு சிறு இசை

### சிறுவினா

**1. "பழங்களை விடவும் நசுங்கிப் போனது" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

இக்கூற்று (இவ் அடி) கல்யாண்ஜி எழுதியுள்ள "அக்கறை" என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**விளக்கம்:**

மிதிவண்டி ஒட்டி வந்த தக்காளி வியாபாரி மிதிவண்டியில் இருந்து சாய்ந்து விழ. கூடையில் இருந்த தக்காளிப் பழங்கள் சிதறி விழுந்தன. தலைக்கு மேல் வேலை இருப்பதாய், அனைவரும் கடந்தும், நடந்தும் சென்றனர். எல்லாம் நசுங்கி வீணானது. பழங்களை விடவும் சக மனிதர்கள் மீது உள்ள நேயமும், அக்கறையும் நசுங்கிப் போனது.

**2. மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.**

| மணல் விளையாட்டு | |
|---|---|
| மணலில் தான் எத்தனை<br>விளையாட்டு விளையாடுவோம்..!.<br>மணல் வீடு கட்டி<br>மகிழ்வுடன் உறவுகளை வளர்த்து<br>விளையாடினோம்..!.<br>ஈர மணலில் கோபுரம் கட்டினோம்<br>கருப்பட்டி செய்து கவிழ்த்து<br>வைத்துப் பேசினோம்..!.<br>மணலுக்குள் குச்சியை<br>ஒளித்து வைத்து<br>கிச்சிகிச்சு தாம்பலம் | விளையாடி மணலில்<br>தொலைந்ததை பொறுமையாய்க்<br>கண்டெடுத்தோம்..!.<br>மணலில் ஓடினோம்<br>ஆடினோம் பாடினோம்<br>இன்றோ..!.<br>மடியிலே மடிக்கணினியோடு<br>பல விளையாட்டை ஆடுகிறார்<br>மண்ணில் கால் வைக்க<br>விடுவதில்லை...பெற்றோர்....!. |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோர் எந்த நாட்டு தத்துவஞானிகள்?**

அ) எகிப்து ஆ) கிரேக்கம் இ) இத்தாலி ஈ) இஸ்ரேல்

விடை: ஆ) கிரேக்கம்

**2. கவிஞர் கல்யாண்ஜியின் இயற்பெயர் யாது?**

அ) கல்யாணராமன் ஆ) கல்யாணசுந்தரம்

இ) கலியுகராமன் ஈ) கலியபெருமாள்

விடை: ஆ) கல்யாணசுந்தரம்

**3. கல்யாண்ஜியின் புனைபெயர் யாது?**

அ) வாணிதாசன் ஆ) வண்ணதாசன் இ) தமிழ்தாசன் ஈ) பிச்சை

விடை: ஆ) வண்ணதாசன்

**4. கல்யாண்ஜி சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற ஆண்டு எது?**

அ) 2014 ஆ) 2015 இ) 2016 ஈ) 2017

விடை: இ) 2016

www.nammakalvi.com



**5. சாகித்ய அகாதெமி விருது பெற்ற கல்யாண்ஜியின் நூல் எது?**

அ) புலரி ஆ) ஆதி இ) உயரப்பறத்தல் ஈ) ஒரு சிறு இசை

**விடை: ஈ) ஒரு சிறு இசை**

**6. பொருத்திக்காட்டுக:**

| | |
|---|---|
| அ) ஒளியிலே | – கடிதத்தொகுப்பு |
| ஆ) சில சிறகுகள் சில பறவைகள் | – கட்டுரைத் தொகுப்ப |
| இ) அந்நியமற்ற நதி | – சிறுகதைத் தொகுப்பு |
| ஈ) அகமும் புறமும் | – கவிதைத் தொகுப்பு |

அ) 3, 1, 4, 2 ஆ) 1, 2, 4, 3 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 2, 1

**விடை : அ) 3, 1, 4, 2**

## குறுவினா

**1. வண்ணதாசன் என்னும் புனை பெயரில் எழுதுபவர் யார்? அப்பெயரில் எவ்விலக்கியத்தில் பங்களித்து வருகிறார்?**

- கல்யாண்ஜி
- கதை இலக்கியத்தில் 'வண்ணதாசன்' என்னும் பெயரில் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார்.

## சிறுவினா

**1. கல்யாண்ஜியின் கவிதை நூல்களை எழுதுக.**

- புலரி
- மணல் உள்ள ஆறு
- முன்பின்
- அந்நியமற்ற நதி
- ஆதி ஆகியவையாகும்.

**2. கல்யாண்ஜியின் சிறுகதை நூல்களை எழுதுக.**

- கலைக்க முடியாத ஒப்பனைகள்.
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்.
- உயரப் பறத்தல்.
- ஒளியிலே தெரிவது போன்றவையாகும்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

பக்கம்: 238

**1. நிலா, மழை, காற்று, தண்ணீர் போன்றவை குறித்து புதுக்கவிதைகளைத் திரட்டி இலக்கிய மன்றத்தில் படித்துக் காட்டுக.**

**எ.கா** **ஹைக்கூ**

**இந்தக் காட்டில்**
**எந்த மூங்கில்**
**புல்லாங்குழல்?**
– அமுதோன்

**பிம்பங்களற்ற தனிமையில்**
**ஒன்றிலொன்று முகம் பார்த்தன**
**சலூன் கண்ணாடிகள்**
– நா. முத்துக்குமார்

**வெட்டுக்கிளியின் சப்தத்தில்**
**மலையின் மௌனம்**
**ஒரு கணம் அசைந்து திரும்புகிறது.**
– ஜப்பானியக் கவிஞர் பாஷோ

| நிலா | மழை |
|---|---|
| கடலில் குளித்து<br>கார்முகிலில் தலை முடித்து<br>வான்வெளியில் நீந்தி வரும்<br>நிலவே..<br>உன்னை நோக்கும் போதெல்லாம்<br>வியப்பே..<br>உடல் பருத்தும் ஒளிகுன்றாய்<br>உடல் இளைத்தும் ஒளிகுன்றாய்<br>முழுமதியாய் ஒய்வின்றி ஒளிர்வாய்<br>ஒளிவீசாது ஒருநாள் ஒய்வும்<br>கொள்கிறாய்.. | மரம் எனும் தேவதை<br>கவரி வீசினாள்<br>கருமேகங்கள் ஒன்றானது<br>ஒன்றான மகிழ்ச்சியில்<br>இடித்தும் மின்னியும்<br>இசை, நடனம்<br>நாட்டியம் பயின்றதாலே<br>ஆனந்தக் கண்ணீர் சிந்தியது<br>மழை என.. |
| **காற்று** | **தண்ணீர்** |
| எனக்கு சுவாசம்<br>தரும் காற்றே நீ இன்றி<br>நிலவுலகில் ஏதுமில்லை..<br>தெற்கிலிருந்து நீ வந்தால்<br>தென்றல் ஆகிறாய்<br>வடக்கிலிருந்து நீ வந்தால்<br>வாடை ஆகிறாய்<br>கிழக்கிலிருந்து நீ வந்தால்<br>கொண்டல் ஆகிறாய்<br>மேற்கிலிருந்து நீ வந்தால்<br>மே(ல்) காற்று ஆகிறாய்<br>எங்ஙனம் நீ வந்தாலும்<br>எப் பெயரில் வந்தாலும்<br>எங்களின் ஜீவன் நீயேயாவாய்! | நீரே! உலகில்<br>முக்கால் பாகம்<br>உன்னால்<br>நிறைந்திருந்தாலும்<br>ஏன் பற்றாக்குறை..<br>வாய்க்கால் குளம் குட்டை<br>நதி கடல் எனப் பல<br>முகங்கள் உனக்கு. ஆனாலும்<br>மொண்டு எடுப்பதற்கு<br>இயலா நிலையில்<br>பல ஊர்கள்<br>பல மக்கள்<br>உனக்காகக்,,<br>காத்திருப்ப தேனோ! |

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

இயல் ஒன்பது

# குறுந்தொகை

## நுழையும் முன்:

- "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என மனிதம் பேசி, மனித மாண்புகளையும் காட்டும் காலக் கண்ணாடி சங்க இலக்கியம்.
- அவற்றுள் ஒன்றான குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும். "நல்ல குறுந்தொகை" என இந்நூல் சிறப்பிக்கப்படுகிறது.
- குறுந்தொகைப் பாடல்கள் பலவும் இயற்கை காட்சிகள் மூலம் நாட்டுவளத்தைப் படம் பிடித்துக் காட்டுவனவாகும்.
- அத்தகைய ஒரு பாடலைத் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரத்தைத் துடைக்க, ஆறுதல் கூற தோழி பயன்படுத்துகிறாள்.

## நூல்குறிப்பு (நூல் வெளி):

- குறுமை + தொகை = குறுந்தொகை.
- நான்கடி சிறுமையும் எட்டடி பெருமையும் உடைய குறுகிய பாக்களால் ஆன தொகுதியாகும்.
- இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக, 401 பாடல்கள் உள்ளன. 401 பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
- களவு, கற்பு என்னும் அக ஒழுக்கங்களை விளக்கும் நூலாகும். தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரால் சான்று காட்டப்பட்ட பெருமையுடைய நூல் ஆகும்.
- இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி.பி 2ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அன்பின் ஐந்திணைகளில் நிகழும் அக ஒழுக்கத்தை இந்நூல் கூறுகிறது.
- திணை – ஒழுக்கம், துறை – திணையின் உட்பிரிவு
- குறுந்தொகையை 1915ம் ஆண்டு சௌரிப் பெருமாள் அரங்கனார் பதிப்பித்துள்ளார்.
- பாடப்பகுதி: நம் பாடப்பகுதியாக அமைந்த பாடல் 37 வது பாடல் ஆகும்.

## ஆசிரியர் குறிப்பு:

- பாலைபாடிய பெருங்கடுங்கோ சேரமரபைச் சேர்ந்த மன்னர். கலித்தொகையில் பாலைத்திணையை பாடியதால் "பாலை பாடிய பெருங்கடுங்கோ" என அழைக்கப்பட்டார்.
- இவர் இப்போது "வயநாடு" என்று அழைக்கப்படும் கேரள பகுதியான "பாயல் நாட்டில்" பிறந்தவர்.
- இவர் பாலைத்திணை பாடுவதில் வல்லவர். நுண்மாண் நுழைபுலம் மிக்க இப்பெருங்கடுங்கோ, பெருஞ்செல்வமும், கொடை உள்ளமும் சிறக்க பெற்றவராம்.

www.nammakalvi.com



## பாடலில் அமைந்த திணை

### பாலை

**துறை** : தலைவன் விரைந்து வந்து விடுவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.

**கூற்று** : தோழி தலைவியிடம் கூறியது.

### வருந்தாதே

**தோழி தலைவியிடம், தலைவியே வருந்தாதே!**

- தலைவன் உன்னிடம் மிகுந்த அன்பும், விருப்பமும் உடையவன். விரைவில் மீண்டும் வந்து உன்னோடு அன்புடன் இருப்பான்.
- அவன் பொருளீட்டுவதற்காக, உன்னை விட்டுப் பிரிந்து சென்ற வழி எது? தெரியுமா?
- பெண் யானையின் பசியைப் போக்கும் பொருட்டு, பெரிய தும்பிக்கையை உடைய ஆண் யானையானது. மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டை உரித்து உணவாகக் கொடுத்து தன் அன்பை வெளிப்படுத்தும் காட்சிகள் நிறைந்த பாலைவழியாகும்.
- அந்தக் காட்சியை தலைவனும் காண்பான். அக்காட்சி தலைவனுக்கு உன்னை நினைவுபடுத்தும். எனவே அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது ஆற்றியிருப்பாயாக என்று கூறினாள். இவ்வாறு தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள்.

### இறைச்சிப் பொருள்

இறைச்சி என்பது நிலத்தின் கருப்பொருளை மையமாக வைத்து, வெளிப்படையாகப் பொருளைக் கூறாது. குறிப்பால் உணர்த்துவது ஆகும்.

**இப்பாடலில்,**

"மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பினை தோழி அவர் சென்ற ஆறே"

- என்னும் அடியில் பாலை நிலக் கருப்பொருளாகிய 'யா' மரத்தை மையமாக வைத்து ஆண் யானை, பெண் யானைக்கு உணவு கொடுக்கும் காட்சியைக் காண்பான் தலைவன் என்று கூறுவது மூலம்,
- அந்த ஆண் – பெண் யானையின் காட்சி உன் தலைவனுக்கு உன்னை நினைவூட்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதால் இப்பாடலில் இறைச்சிப் பொருள் அமைந்துள்ளது.

**சொல்லும் – பொருளும்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நசை** | – | விருப்பம் | **மென்சினை** | – | மெல்லிய கிளை |
| **களைஇய** | – | நீக்க | **யா** | – | ஒரு வகை மரம் (பாலை நிலத்தில் வளரும்) |
| **நல்கல்** | – | வழங்குதல் | | | |
| **பிடி** | – | பெண் யானை | **பொளிக்கும்** | – | உரிக்கும் |
| **வேழம்** | – | ஆண் யானை | **ஆறே** | – | வழியே |

**இலக்கணக் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| **களைஇய** | – | சொல்லிசை யளபெடை |
| **பெருங்கை** | – | பண்புத்தொகை |

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| **மென்சினை** | – | பண்புத்தொகை |
| **பிடிபசி** | – | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| **பொளிக்கும்** | – | செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று |
| **அன்பின** | – | பலவின்பால் அஃறிணை வினைமுற்று |
| **நல்கலும் நல்குவர்** | – | எச்சஉம்மை |

## பகுபத உறுப்பிலக்கணம்:

**உடையர் – உடை + ய் + அர்**

| | | |
|---|---|---|
| உடை | – | பகுதி |
| ய் | – | உடம்படுமெய் சந்தி |
| அர் | – | பலர்பால் வினைமுற்று விகுதி |

**பொளிக்கும் – பொளி + க் + க் + உம்**

| | | |
|---|---|---|
| பொளி | – | பகுதி |
| க் | – | சந்தி |
| க் | – | எதிர்காலம் காட்டும் இடைநிலை |
| உம் | | வினைமுற்று விகுதி |

**நல்குவர் – நல்கு + வ் + அர்**

| | | |
|---|---|---|
| நல்கு | – | பகுதி |
| வ் | – | எதிர்கால இடைநிலை |
| அர் | – | பலர்பால் வினைமுற்று விகுதி |

**சென்ற – செல்(ன்) + ற் + அ**

| | | |
|---|---|---|
| செல் | – | பகுதி ல் – ஆனது விகாரம் |
| ய் | – | இறந்தகால இடைநிலை |
| அர் | – | பெயரெச்ச விகுதி |

## பாலை நிலத்தின் கருப்பொருள்கள்:

**பாலைத் திணையின் முதற்பொருள்**

| | | |
|---|---|---|
| நிலம் | : | வெப்பம் மிகுந்த சுரமும் சுரம் சார்ந்த பகுதியாகும் |
| பொழுது | : | சிறுபொழுது: நண்பகல் |
| பெரும்பொழுது | : | வேனில், பின்பணி. |

## கருப்பொருள்கள்:

| | | |
|---|---|---|
| தெய்வம் | – | துர்க்கை |
| மக்கள் | – | மீளி, விடலை, எயிற்றியர், எயினர் |
| பறவை | – | கழுகு, பருந்து, புறா |
| ஊர் | – | குறும்பு |
| விலங்கு | – | வலுவிழந்த புலி, செந்நாய், கடந்து செல்லும் யானைகள் |
| நீர் | – | நீர் வற்றிய சுனை, நீர் வற்றிய கிணறு |
| பூ | – | மரா, குரா, பாதிரி |
| மரம் | – | இருப்பை, ஓமை, பாலை(யா) |
| பறை | – | போர்ப்பறை |
| பண் | – | பாலைப்பண் (பஞ்சுரம்) |
| யாழ் | – | பாலையாழ் |
| உணவு | – | வழிப்பறி செய்து கிடைக்கப் பெறும் பொருள் |
| தொழில் | – | சூறையாடல், வழிப்பறி செய்தல் |

www.nammakalvi.com



## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?**

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

விடை: இ) பாலை

### குறுவினா

**1. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளை கண்டறிக.**

1. பிடிபசி – ஆறாம் வேற்றுமைத்தொகை
2. களைஇய – சொல்லிசை அளபெடை
3. பெருங்கை – பண்புத்தொகை
4. பெருங்கை வேழம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**2. குறுந்தொகை – பெயர் காரணம் எழுதுக.**

குறுமை + தொகை – குறுந்தொகை நான்கு முதல் எட்டு அடிகளால் குறுகிய பாக்களால் ஆன தொகுக்கப்பட்ட நூல் ஆதலால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.

### சிறுவினா

**1. 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.**

- யா மரம் என்பது பாலை நிலத்தில் உள்ள ஒருவகை மரம் அதன் பட்டை ஈரத் தன்மையுடையது பாலை நிலத்தின் வழியாகக் கடந்து செல்லும் யானைகள்.
- அப்போது ஆண் யானை பெண் யானையின் பசியையும் களைப்பையும் போக்கும் பொருட்டு அம்மரப்பட்டைகளை தன் தும்பிக்கையில் உரித்து பெண் யானைக்கு கொடுக்கும் காட்சியை குறுந்தொகை,
- “பிடி பசி களைஇய பெருங்கை வேழம் மென்சினை யாஅம் பொளிக்கும்” என்று விளக்குகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. ‘நசை பெரிது’ – எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் யார் யாரிடம் கூறியது?**

அ) தோழியிடம் தலைவி கூறியது ஆ) தலைவியிடம் தோழி கூறியது

இ) தலைவன் தலைவியிடம் கூறியது ஈ) தலைவி தலைவனிடம் கூறியது

விடை: அ) தோழியிடம் தலைவி கூறியது

www.nammakalvi.com



2. பொருத்துக.

| சொல் | பொருள் | | |
|---|---|---|---|
| அ) பிடி | 1) பால நிலத்து மரம் | அ) 4, 3, 1, 2 | ஆ) 4, 3, 2, 1 |
| ஆ) வேழம் | 2) வழங்குதல் | இ) 2, 3, 4, 1 | ஈ) 4, 2, 1, 3 |
| இ) யா | 3) ஆண்யானை | | விடை: அ) 4, 3, 2, 1 |
| ஈ) நல்கல் | 4) பெண்யானை | | |

3. குறுந்தொகைப் பாடலின் அடி வரையறை யாது?

அ) 4 – 8 ஆ) 3 – 9 இ) 9 – 12 ஈ) 13 – 39

விடை: அ) 4 – 8

4. 'குறுந்தொகை' நூலைப் பதிப்பித்தவர் யார்?

அ) பூரிக்கோ ஆ) சௌரிப்பெருமாள் அரங்கனார்

இ) பிள்ளைப்பெருமாள் ஈ) உ.வே.சாமிநாதர்

விடை: ஆ) சௌரிப்பெருமாள் அரங்கனார்

5. குறுந்தொகை நூல் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு எது?

அ) 1914 ஆ) 1915 இ) 1925 ஈ) 1920

விடை: ஆ) 1915

6. கலித்தொகையில் "பாலைத்திணை" பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) ஓதலாந்தையார் இ) பெருங்கடுங்கோ ஈ) அம்மூவனார்

விடை: இ) பெருங்கடுங்கோ

7. "நசை பெரிது" என்னும் குறுந்தொகைப் பாடலை பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) ஓதலாந்தையார் இ) பெருங்கடுங்கோ ஈ) அம்மூவனார்

விடை: இ) பெருங்கடுங்கோ

8. பாலை பாடிய பெருங்கடுங்கோ ________ மரபைச் சார்ந்தவர்?

அ) சோழ ஆ) பாண்டிய இ) சேர ஈ) பல்லவ

விடை: இ) சேர

9. 'நசை பெரிது' பாடலில் அமைந்துள்ள இலக்கிய உத்தி எது?

அ) உள்ளுறை உவமை ஆ) இறைச்சி

இ) உவமை ஈ) உருவகம்

விடை: ஆ) இறைச்சி

10. 'களைஇய' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?

அ) இன்னிசை அளபெடை ஆ) வினையெச்சம்

இ) சொல்லிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

விடை: இ) சொல்லிசை அளபெடை

www.nammakalvi.com



## குறுவினா

**1. குறுந்தொகை – குறிப்பு வரைக.**

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை.
- இது தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது.
- 4 அடி சிற்றெல்லையும் 8 அடி பேரெல்லையும் கொண்டவை.
- 1915 ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார்.

**2. பெருங்கடுங்கோ – குறிப்பு வரைக.**

- குறுந்தொகையின் 37ஆவது பாடலைப் பாடியவர் பெருங்கடுங்கோ.
- இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர் ஆவார்.
- கலித்தொகையில் பாலைத்திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப் பெற்றார்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 240

**1. நீங்கள் கண்ட / உதவி செய்து மனம் நெகிழ்ந்த நிகழ்வை வகுப்பறையில் பதிவு செய்க.**

ஒருநாள், நான் காய்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்றேன். காலை நேரமாக இருந்தாலும், வெயில் சுறுசுறுவென்று எரிந்துகொண்டிருந்தது. வெப்பம் அதிகமாக இருந்தது. இந்த வெயிலில் அம்மா அனுப்பி விட்டாளே என்று எண்ணிக்கொண்டே சென்றேன்.

என் முன்னே 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் தடியின்றி நடந்து கொண்டிருந்தார், நான் அவரைக் கடந்து செல்ல முயன்றபோது, சோர்வுற்று கீழே விழுந்து விட்டார், தண்ணீர் தெளித்து, தேநீர் வாங்கிக் கொடுத்து என ஒவ்வொருவரும் ஒவ்வொரு உதவி செய்தனர்.

சற்று அவர் தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். நான் அருகில் சென்று ஐயா! ஏன் விழுந்து விட்டீர்கள்? என்ன காரணம்? என்றேன்,

தம்பி நான் சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. என்னால் பசி மயக்கத்தில் ஓரடி கூட நடக்க முடியாது போல் உள்ளது என்ன செய்வேன் என்றார் என் கையில் அம்மா காய்கறி வாங்கி வரச் சொல்லி கொடுத்த 50 ரூபாய் இருந்தது. அருகில் ஒரு சிற்றுண்டிச் சாலை 20 ரூபாய்க்கு 4 இட்லியை வாங்கி கொடுத்துவிட்டு, மீதி உள்ள பணத்தில் காய்கறி வாங்கிச் சென்றேன். அம்மாவிடம் பயந்து கொண்டே கூறினேன். இப்பதாண்டா நீ என் பிள்ளை! என்று கூறி என்னை உச்சி முகர்ந்தாள்.

நான் மகிழ்ந்தேன்; நெகிழ்ந்தேன்.

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*விரிவானம்*

# இயல் ஒன்பது தாய்மைக்கு வறட்சி இல்லை

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. 'தாய்மைக்கு வறட்சி இல்லை', என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.**

**முன்னுரை:**

ஏது வறண்டு போனாலும் உலகில் தாய்மை வறண்டு போவது இல்லை. தாய்மை வழியே மனிதம் காக்கப்படுவதை சு. சமுத்திரம் அவர்கள் இக்கதையில் படைத்திருக்கும் ஏழைத் தாயின் வழி புலப்படுத்துகிறார்.

**1. அன்பும் கண்டிப்பும் உடைய மனைவி:**

தூங்கிக் கொண்டிருக்கும் போது பேரிரைச்சலுடன் வந்த ஜீப் தன் மீதும் தன் கணவன் மீதும் மோதாமல் இருக்க தன் கணவனை உருட்டி விட்டு தானும் அங்கப்பிரதட்சணம் செய்வது போல் உருண்டு காப்பாற்றிய போது ஏழைத்தாய் அன்புடைய மனைவியாகிறாள்.

செல்வந்தன் தன் கைக்குக் கிடைத்த உணவு வகையறாக்களை அள்ளிப்போட்டு அவள் கணவனைத் தன் குடும்பத்தை நோக்கி நடக்கும்படி முதுகைத் தள்ளுகிறான். கையில் உணவுடன் வந்த கணவனைத் தன் கண்களால் இப்படி ஒரு பிழைப்பா என்று தன் தலையில் கைகளால் அடித்தபடியே அவனைத் தண்டிக்கிறாள். இவ்வாறு கண்டிப்பும் அன்பும் கலந்து அந்த ஏழைத்தாய் வறுமையிலும் தன்மானம் உள்ளவளாகக் காணப்படுகிறாள்.

**2. குழந்தைகளுக்குப் பரிமாறுதல்:**

குழந்தைகள் அம்மா வாதாடுவதைக் கோபமாய்ப் பார்த்தன. அதனைக் கண்ட தாய் அவர்கள் பசியில் இருப்பதைப் புரிந்துகொள்கிறாள். பசிமுள் அவள் வயிற்றைக் குத்தியது. சப்பாத்தியையும் வெஜிடபிள் பிரியாணியையும் கண்ட குழந்தைகள் காணாததைக் கண்டது போல் சுவைத்தார்கள் அவள் அனுதாபத்துடன் குழந்தைகளைப் பார்த்து,

இப்போ இப்படிச் சாப்டுகிறீர்கள் ராத்திரி என்ன செய்வீர்கள்? என்று உள்ளத்துள் வருந்துவதால் அன்புத்தாய் ஆகிறாள்.

**3. மனிதநேயம் புரிந்தாள்:**

அவள் சாப்பிட ஆரம்பித்தபோது உலர்ந்த தொண்டைக்குள் உணவு இறங்க மறுக்கிறது. உணவைக் கொடுத்தவர் தண்ணீரையும் கொடுத்து "உன்னைப் போல கஷ்டப்பட்ட ஒரு தாய்க்குத் தான் மகனாய் பிறந்தேன் உன்னை என் தாயாய் எண்ணி கொடுக்கிறேன்" என்ற போது அவர் உள்ளத்தில் உள்ள மனிதநேயத்தைப் புரிந்து கொள்கிறாள்.

www.nammakalvi.com



### 4. நாய்க்குட்டிகளை விரட்டுதல்:

சாப்பிடும் நேரத்தில் தொந்தரவு செய்த நாய்க்குட்டிகளைக் குரலிட்டபடியே கையைத் தூக்கி துரத்தினாள். ஒரு காலைத் தூக்கியபடியே ஓடின. நாய்க்குட்டி ஒலி எழுப்பியது.

### 5. சுவைத்து உண்டாள்:

தட்டை குழந்தையைப் போல மடியில் வைத்துக்கொண்டு உணவை வாய்க்குள் போட்டாள். இவ்வளவு ருசியாய் அவள் சாப்பிட்டதாய் நினைவில்லை. உண்டு உண்டு அந்த சுவையில் சொக்கி லயித்துக்கொண்டிருந்தாள். நாயின் ஒலி அவளைச் சுண்டி இழுத்தது. பாசத்தில் பரிதவித்து ஓடுகிறாள்.

### 6. நாய் குட்டிகளுக்கும் தாயாகிறாள்:

எச்சில் கையைத் தரையில் ஊன்றி எழுந்தாள். நாய்க்குட்டியை வாரி எடுத்தாள். அதன் முதுகைத் தடவினாள். மடியிலிட்டு தாலாட்டினாள். தட்டை தன் பக்கமாய் இழுத்தாள். உணவு சிறுசிறு கவளமாக உருட்டி நாய்க்குட்டிக்கு ஊட்டினாள். தட்டில் இருந்த உணவு குறையக்குறைய அவளது தாய்மை கூடிக்கொண்டே இருந்தது

### முடிவுரை:

வறுமையிலும் அன்பு குறையாத மனிதநேயம் மாண்பு குறையாத மறையாத ஏழைத்தாயின் கதாபாத்திரத்தை நம் கண்முன் படைத்துக்காட்டி தாய்மைக்கு என்றும் வறட்சியில்லை என்பதைச் சு.சமுத்திரம் விளக்கி உணர்த்தியுள்ளார்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 245

**1. "பிறருக்கு உதவி செய்வதற்கு மொழி தேவையில்லை" என்ற கருத்தை அடிப்படையாக் கொண்டு வகுப்பறை மேடையில் நடித்துக் காட்டுக.**

**மாணவர்களே,**

உங்கள் வகுப்பறை மேடையில் (mime show) மௌன நாடகமாக பின்வருவதை நடித்துக்காட்டுங்கள்.

நீங்கள் சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். அப்போது மிதிவண்டியில் வரும் ஒருவருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டு, சாலையில் விழுகிறார் உடனடியாக நீங்கள் அவருக்கு முதலுதவி செய்து, அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவ உதவி செய்து, வீட்டு முகவரியை விசாரித்து பத்திரமாய் அழைத்து செல்வது என மேற்கூறிய காட்சியை நடித்து காட்டுங்கள்.

மனிதநேயம், அன்பு, இரக்கம், உதவி இவற்றை வெளிப்படுத்த மொழி தேவையில்லை என்பதை உணர்த்துங்கள்.

**2. கதையைத் தொடர்ந்து எழுதித் தலைப்பிடுக.**

### சுண்டெலியின் அறிவு

சுண்டெலிகளுக்குப் பூனையால் மிகவும் துன்பமான நேரம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று சுண்டெலிகளைப் பிடித்துத் தின்றது பூனை. சுண்டெலிகள் ஒன்று சேர்ந்து என்ன செய்வது என்று ஆலோசித்தன. மேலும் மேலும் ஆலோசித்தன. ஆனால் ஒரு முடிவும் கிடைக்கவில்லை.

பிறகு ஒரு சின்ன சுண்டெலி சொன்னது, பூனைக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். நான் செய்கிறேன் என்றது. சரி முயற்சி செய்து பார் என்று மற்ற சுண்டெலிகள் கூறின.

www.nammakalvi.com



அன்று பூனை தனக்குத் தேவையான சுண்டெலிகளைப் பிடித்துத் தின்று ஓய்வாக படுத்திருந்தது. சுண்டெலி அருகில் சென்றது. பூனை ஐயா! தங்களுக்கு என் வணக்கம். எங்கள் பூனைகளின் சார்பாக உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். அப்படியா என்ன... விஷயம் சொல்லு என்றது பூனை.

ஐயா! உங்கள் பசியைப் போக்க நீங்கள் அலைந்து திரிந்து எங்களைத் தேடி வந்து சாப்பிட வேண்டாம் ஐயா!

நாங்களே தேடி வந்து உங்களுக்குத் தேவையானபோது உணவாகி விடலாம் என்று முடிவு செய்துள்ளோம். ஐயா! ஓ அப்படியா ரொம்ப மகிழ்ச்சி. சரி எனக்கு எப்போது பசி என்று நீங்கள் எப்படி தெரிந்து கொள்வீர்கள்?

அதற்கு ஒரு யோசனை இருக்குதய்யா... ம்ம்.. சொல்லு உங்கள் நான்கு கால்களில் ஒரு காலில் மணி ஒன்றை கட்டி விடுகிறேன் ஐயா.

நீங்கள் பசிக்கும் போது... உங்கள் காலை தரையில் உதையுங்கள் மணியோசை கேட்டவுடன் நாங்கள் ஓடோடி வருகிறோம் ஐயா... என்றது.

பூனை யோசித்தது... சரி... நானும் வளை தேடி ஓடி வரவேண்டியிருக்காது சாப்பிட்டோமா... படுத்தோமான்னு நிம்மதியா இருப்பேன்... என்றது.

பூனையைத் தன் அறிவாற்றலால் வென்ற சுண்டெலி, பூனையின் காலில் மணியைக் கட்டிவிட்டு ஓடி வந்து விட்டது.

பயந்து போய் நின்ற தன் சக சுண்டெலிகளிடம் நான் மணியைக் கட்டிவிட்டேன். இனி மகிழ்ச்சியாக அவரவர் வளைகளிலும். பொந்துகளிலும் சுதந்திரமாக வாழலாம் என்றது.

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*கற்கண்டு*

# இயல் ஒன்பது அணியிலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?**

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி

விடை: ஆ) பொருள் பின்வருநிலையணி

### குறுவினா

1. **நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் – இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.**

கவித்தேன், சுவைத்தேன் – உருவகம்

### சிறுவினா

1. **உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

ஒரு பொருளின் தன்மையைச் சிறப்பிக்க அதற்கு உவமையாகும் வேறொரு பொருள் மேல் உவமையின் தன்மையை ஏற்றிக் கூறுவது உருவகம் ஆகும். உவமை உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

**சான்று:**

“இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்”

**இப்பாடலில்**

| | | |
|---|---|---|
| இன்சொல் | – | நிலம் |
| வன்சொல் | – | களை |
| வாய்மை | – | எரு |
| அன்பு | – | நீர் |
| அறம் | – | கதிர் |

என உருவகிக்கப்பட்டுள்ளது.

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது எது?**

அ) யாப்பு ஆ) பொருள் இ) சொல் ஈ) அணி

விடை: ஈ) அணி

2. **உவமை, உவமேயம் இரண்டும் ஒன்றே என்று தோன்றக்கூறும் அணி எது?**

அ) உவமை ஆ) உருவகம் இ) பிறிதுமொழிதல் ஈ) சிலேடை

விடை: ஆ) உருவகம்

3. **புகழ்வது போல பழிப்பதும், பழிப்பது போல் புகழ்வதும் .............. ஆகும்.**

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) சொற்பொருள் பின்வருநிலையணி

இ) வஞ்சப் புகழ்ச்சியணி ஈ) சிலேடை அணி

விடை: இ) வஞ்சப் புகழ்ச்சியணி

4. **பின்வருநிலையின் வகை ...............**

அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6

விடை: அ) 3

5. **எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு – இக்குறட்பாவில் இடம் பெறும் அணி ...............**

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) சிலேடை அணி

விடை: இ) சொற்பொருள் பின்வருநிலையணி

6. **தேவ ரனையர் கயவர் அவருந்தாம்**
**மேவன செய்தொழுகலான் – இக்குறட்பாவில் வரும் அணி ...............**

அ) உருவகம் ஆ) உவமை இ) வஞ்சப்புகழ்ச்சி ஈ) தற்குறிப்பேற்றம்

விடை: இ) வஞ்சப்புகழ்ச்சி

## குறுவினா

1. **அணி என்றால் என்ன?**

செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும். சொல்லாலும், பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி ஆகும்.

2. **பின்வருநிலை அணி என்றால் என்ன?**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் பல இடத்தும் வருவதால் ‘பின்வருநிலை’ அணியாகும்.

www.nammakalvi.com



**3. பின்வருநிலை அணி எத்தனை வகைப்படும்?**

மூன்று வகைப்படும்.

- சொல் பின்வருநிலையணி
- பொருள் பின்வருநிலையணி
- சொற்பொருள் பின்வருநிலையணி

**4. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை" – இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி சொற்பின்வருநிலையணி ஆகும்.

**விளக்கம்:**

முன்வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து. வேறு பொருள் உணர்த்துவது சொற்பின்வருநிலையணி ஆகும்.

'துப்பு' – என்ற சொல் பல இடத்தில் வந்துள்ளது. ஆனால், நல்ல, நன்மை, உணவு – என பல பொருளில் வருகிறதால், இக்குறட்பா சொற்பின்வரு நிலைக்கு சிறந்த சான்றாக அமைகிறது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 247

**1. கீழ்காணும் குறட்பாக்களில் அமைந்த அணி வகைகளைக் கண்டறிக.**

**அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்**

**அணி** : ஏகதேச உருவக அணி

**அணி விளக்கம்** : தொடர்புடைய இருபொருட்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

**பொருத்தம்** : சான்றாண்மையது பெருமை தோன்ற அதனைக் கடலாக்கியும் சான்றாண்மையைத் தாங்கிக் கொண்டு நிற்பவரை கடற்கரையாக்கி உருவகப்படுத்தாமையால் ஏகதேச உருவக அணி ஆயிற்று.

**ஆ) பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து**

**அணி** : சொற்பொருள் பின்வருநிலையணி

**அணி விளக்கம்** : வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது "சொற்பொருள் பின்வருநிலையணி" ஆகும்

**பொருத்தம்** : நாண்` என்னும் சொல் `வெட்கம்` என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளமையால் சொற்பொருள்பின்வருநிலையணியாயிற்று.

www.nammakalvi.com



இ) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

**அணி** : சொற்பொருள் பின்வருநிலையணி

**அணி விளக்கம்** : வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது "சொற்பொருள் பின்வருநிலையணி" ஆகும்.

**பொருத்தம்** : `தீய` என்னும் சொல் `தீமை` என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளமையால் சொற்பொருள்பின்வருநிலையணியாயிற்று.

**2. உவமையணி அமைந்த பாடல் அடிகளை எழுதுக.**

**குறள்:**

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய் கவர்ந்தற்று.

**பாடல்:**

கன்று குரல் கேட்ட பசு போல மாற்றார்
கதறுவதைக்கேட்டவுடன் அன்பு செய்தால்
வென்று வரும் மனித குலம்

**3. கீழ்க்காணும் புதுக்கவிதையில் அமைந்த அணியினை எழுதுக.**

**விருட்சங்கள்**

மண்ணரசி மடக்காமலேயே
பிடித்துக் கொண்டிருக்கும்
பச்சைக் குடைகள்

– **முற்றுருவகம்.**

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 249

**மொழி பெயர்க்க.**

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

ஒரு மான், ஒரு கடல் ஆமை, ஒரு காகம், ஓர் எலி ஆகியவை நட்பு கொண்டிருந்தன. ஒருநாள் வேடன் வலைவிரித்து மானைப் பிடித்து விட்டான். நண்பர்கள் மானைக் காப்பாற்ற திட்டம் தீட்டின. மானை, நீ இறந்ததுபோல் அசைவின்றி படுத்துக் கொள் என்றன. காகம், இறந்து போன மாதிரி படுத்திருந்த மான் மீது அமர்ந்து கொத்த தொடங்கியது. கடல் ஆமை வேடனின் வழிமறித்தது; அவனை அலைக்கழித்தது. வேடன் வலையில் அகப்பட்ட மான் இறந்து விட்டது என

எண்ணி சென்று அதனை விட்டு விடுகிறான். கடல் ஆமை இன்னும் வேடனை அலைக்கழித்தபடியே இருக்கிறது. அதற்குள் எலி வலையைக் கடித்து மானைக் காப்பாற்றத் தொடங்கியது. மானை விடுத்த வேடன் கடலாமையைப் பிடிக்க எண்ணியபோது காகம் ஆமையை கொத்திக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு விரைந்து சென்று சிறிய கடலாமையை வேடனிடம் இருந்து காத்தது. இந்தப் பஞ்சதந்திரக் கதை குழுவாக இணைந்து ஒன்றுபட்டு செயல்பட்டால் பல சாதனைகளைப் புரியலாம் என்பதை உணர்த்துகிறது.

## பொருத்தமான நிறுத்தற்குறியிடுக.

ஆசிரியர் மாணவர்களிடம் மாணவர்களே கடவுளரையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று என்று கூறினார்.

பிள்ளைத் தமிழ் நூல்கள் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலியன.

அடடா என்று சிலிப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில் குமரகுருபாரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது.

**விடை :**

ஆசிரியர் மாணவர்களிடம், "மாணவர்களே! கடவுளையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி, எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா? தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று" என்று கூறினார்.

பிள்ளைத்தமிழ் நூல்கள்: முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் முதலியன.

"அடடா! என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில், குமரகுருபரரின் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' மிகச்சிறந்ததாகத் திகழ்கிறது.

## சொற்றொடர் உருவாக்குக.

1. **செந்தமிழும் சுவையும் போல**

தலைவன் தலைவியாக நீவிர் இருவரும் செந்தமிழும் சுவையும் போல இணைந்தே மகிழ்வுடன் இனிதாய் வாழுங்கள்.

2. **பசுமரத்தாணிபோல**

குழந்தைப் பருவத்தில் நான் மனனம் செய்த பாரதியார் பாடல்கள் அனைத்தும் பசுமரத்தாணி போல பதிந்து விட்டது.

3. **உள்ளங்கை நெல்லிக்கனி போல**

என் தமிழாசிரியர் நடத்திய அணியிலக்கணம் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகப் புரிந்தது.

4. **அத்தி பூத்தாற்போல**

என் மாமாவின் வருகை அத்தி பூத்தாற்போல் என்றாவது நிகழ்வதால் மனம் மகிழ்ச்சியில் துள்ளும்.

www.nammakalvi.com



**5. மழைமுகம் காணாப் பயிர் போல**

தன் குடும்பத்தை விட்டு விடுதிக்குச் சென்ற கமலா, மழைமுகம் காணாப் பயிர் போல சோர்வுற்று வாடிக் காணப்பட்டாள்.

**வடிவம் மாற்றுக.**

**பாடலில் காணும் இலக்கிய வடிவங்களையும் அவற்றுக்குப் புகழ் பெற்றோரையும் கண்டறிந்து எழுதுக.**

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர்
சயங்கொண்டான்; விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காள மேகம்;
பண்பாய பகர்சந்தம் படிக்காசு
அலாதொருவர் பகர ஒணாதே.

– பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

| இலக்கிய வடிவம் | புகழ் பெற்றோர் |
|---|---|
| வெண்பா | புகழேந்தி |
| பரணி | சயங்கொண்டான் |
| விருத்தம் | கம்பன் |
| கோவை, உலா, அந்தாதி | ஒட்டக்கூத்தர் |
| கலம்பகம் | இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டையர்கள் |
| வசைக்கவி | காளமேகம் |
| சந்தம் | படிக்காசுப்புலவர் |

**நூல் மதிப்புரை:**

நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக

**மதிப்புரை:**

சமீபத்தில் நான் விரும்பிப் படித்த நூல் கவிதாசன் அவர்கள் எழுதிய "சிகரங்களைத் தொடுவோம்"என்னும் நூல் ஆகும்.

இந்நூல் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு மட்டுமல்ல, உழைத்து களைத்து சோர்ந்து போய் என்ன சமுதாயம் இது! என்று சலிப்புறும் மனங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கின்ற நூலாகத் திகழ்கிறது எனில் மிகையாகாது. "மனிதனின் மனம் ஆற்றலின் அட்சயபாத்திரம்"

"இனிய சொற்கள் இதயங்களின் கதவுகளைத் திறக்கும் திறவுகோல்"

"சாமானியனும் சாதனையாளனாகலாம்"

"காலையில் எழுந்ததும் உங்கள் திறமையைக் காட்ட புதிதாய் ஒருநாள் பிறந்தது என்று எண்ணுங்கள்" என்பன போன்ற சிந்தனைத் துளிகள் நிறைந்துள்ள இந்நூலைப் படிப்போர் நிச்சயமாய்ச் சிகரங்களைத் தொடுவர்.

படிக்கும் ஒவ்வொருவருக்கும் இந்நூல் தூண்டுகோலாகவும் உந்துசக்தியாகவும் இருக்கும். படியுங்கள். உங்கள் வாழ்வில் உயருங்கள். சிகரங்களைத் தொட்டுச் சிறப்படையுங்கள்.

## நயம் பாராட்டு.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உள்ளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்த தாலே" – வள்ளலார்

## முன்னுரை:

வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க அடிகள் சமத்துவமும், சமதர்மமும் வளரவும், சமயம் என்பது பிறர்நலன் போற்றுவதாக அமையவும் குரல் கொடுத்தவர் ஆவார். இறைவனை எண்ணி இவர் பாடிய பாடல்கள் சிறப்புடன் விலங்குகின்றன. அந்த வகையில் இவரது பாடல் ஒன்றிற்கு அமைந்துள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

## திரண்ட கருத்து:

எந்த ஒரு வேறுபாட்டையும் வெளிப்படுத்தாது எல்லா உயிர்களையும் தம் உயிர் போல எண்ணி, தன் உள்ளத்துள்ளே ஒத்த அன்புடையவராய் இருப்பவரை இறைவன் உவந்து ஏற்கிறார் அத்தகைய உள்ளம் உடையவர்களே சித்துருவாய்த் திகழும் எம்பெருமான் நடம்புரியும் இடம் ஆகும். எல்லா வல்ல இறைவன் அடிக்கு ஏவல் புரியும் சிந்தைமிக இருந்ததால் எவ்வுயிரிடத்தும் அன்புடன் வாழ விழைந்தேன்.

## மையக்கருத்து:

அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி உயிர்களுக்கு ஏவல் செய்வதே இறைவனுக்குச் செய்யும் தொண்டு. அவர் உள்ளத்துள்ளே இறைவன் உள்ளான் என்ற கருத்தை மையமாக வைத்து வள்ளலார் இப்பாடலைப் புனைந்துள்ளார்.

## மோனை நயம்:

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

**சான்று:** எத்துணையும் எவ்வுயிரும் உடையவராய் உவக்கின்றார் என மோனை நயம் அமைந்துள்ளது.

## எதுகை நயம்:

செய்யுளில் அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

**சான்று:** எத்துணையும், ஒத்துரிமை, சித்துரு, வித்தகர் என எதுகை நயம் மிக்குள்ளது.

www.nammakalvi.com



**சந்த நயம்:**

"சந்தம் தமிழுக்குச் சொந்தம்" என்பதை உணர்த்தும் வகையில் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பெற்று அகவல் ஓசையுடன் மையம் பொருந்த அமைந்துள்ளது.

**அணி நயம்:**

"எவ்வுயிரும் தம்முயிர் போல" என்பதில் உவமையணி இடம்பெற்றுள்ளது

**முடிவுரை:**

பக்தி உணர்வு சொட்ட பாடப்பட்டுள்ள இப்பாடல் பக்திச்சுவையும் இலக்கியச் சுவையையும் ஒருங்கே பெற்றுள்ளது.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 251

**1. எழுத்துகளை முறைப்படுத்தி சொற்களைக் கண்டுபிடி.**

- புன்பமொப்லமைழி – பன்மொழிப்புலமை.
- யனிநேம்தம – மனிதநேயம்.
- கச்வப்ஞ்புசிழ்ச – வஞ்சப்புகழ்ச்சி.
- தைக்விதுகபு – புதுக்கவிதை.
- டுசிப்காட்ஞ்ப – காஞ்சிப்பட்டு.

**2. அகராதி காண்க.**

- குரிசில் – பெருமையில் சிறந்தேன், உபகாரி, தலைவன்.
- தலையளி – முகமலர்ந்து கூறுதல், அன்பு, அருள்.
- நயம் – நன்மை, விருப்பம், போற்றுகை, மிகுதி, பயன், நுண்மை, அருள்.
- உய்த்தல் – செலுத்துதல், நடத்துதல், நுகர்தல், அனுப்புதல், அறிவித்தல், நீக்குதல்.
- இருசு – நேர்மை, வண்டியச்சு, மூங்கில்.

**3. தொகைச் சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்குக.**

சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. அவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் அவர்களின் ஆட்சிப்புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

**விடை:**

மூவேந்தர்களிடம், நாற்படைகளும் இருந்தன. முக்கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். நாற்றிசைகளிலும் அவர்களின் ஆட்சி புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் ஐவகை நிலங்களிலும் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இருமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

**4. வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக.**

பூங்கொடி நேற்று பள்ளிக்குச் **சென்றாள்**(செல்). தன் தோழிகளைக் **கண்டு**(காண்)மகிழ்ச்சியுடன் **உரையாடினாள்**(உரை). பின்னர் வங்கிக்குப் **போய்**(போ) தான் கூடுதலாகச் **செலுத்திய**(செலுத்து) தொகையை திரும்பப் **பெற்று**(பெறு)க் **கொண்டு** (கொள்)வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு **வேண்டிய** (வேண்டு) பொருள்களை வாங்கி, அங்கு **நின்ற**(நில்) பேருந்தில் **ஏறி**(ஏறு) வீடு **திரும்பினாள்**(திரும்பு).

www.nammakalvi.com



**5. பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.**

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் **உசஎ.**

இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று **உ** பிரிவாகப் பிரிக்கப்படும். **கஉ** உயிரெழுத்துகள் **கஅ** மெய்யெழுத்துகள் ஆகிய **ங0** எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் எனப்படுகின்றன. சார்பெழுத்துகள் **க0** வகைப்படும்.

**6. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

உயிர்களிடத்து அன்பு வேண்டும்
உயிர்ப் பசி போக்குபவன்
ஆண்டவனுக்கே
தொண்டாற்றும் அடியவனாகிறான்
உயிர் நேயமேஉண்மை நாகரிகம்
உயிர் நேயம் உள்ளவரே
நாகரிகர் ஆவார்....
அந்நேயமற்றோர் நரகரே



## நிற்க அதற்குத்தக...

**7. நான் தலைமைப் பொறுப்பிற்கு வந்தால்..**

- அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன்
- இயன்றவரை பிறருக்கு உதவுவேன்.
- பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பேன்
- அனைவரையும் ஈடுபாட்டுடன் பணிபுரியச் செய்வேன்.
- என் கீழ் பணிபுரிவோரின் சுக துக்கங்களில் பங்கு கொள்வேன்.
- அன்பு கலந்த கண்டிப்புடன் கடமையாற்றுவேன்.

## கலைச் சொல்லாக்கம்

**மனிதம்** – (Humane) மனிதப் பண்புகளாகிய நற்பண்புகளைக் குறிப்பது.

**ஆளுமை** – (Personality) புறத்தோற்றத்தை மட்டும் குறிப்பது அல்ல நற்பண்புகள் ஆளுமைத் தன்மை, தலைமைப் பண்புகளையும் குறிப்பது.

**பண்பாட்டுக் கழகம்** – (Cultural academy) பண்பாடு, நாகரிகத்தைப் பறைசாற்றும் அமைப்பு

**வசனகவிதை** – (free verse) இலக்கணத்துக்குள் கட்டுப்படாது. பேசுவது போல் கருத்தைக் கூறுவது.

**உவமையணி** – (Simitee) ஒரேதன்மையை உரைப்பது.

உருவக அணி – (Metabhor) உவமை. உவமேயம் ஒன்றே என்று தோன்றக் கூறுவது.

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



# பொதுக் கட்டுரைகள்

## 1. காலத்தை வெல்லும் கணினி

**முன்னுரை:**

கடந்த காலத் தகவல்களைத் தன்னுள் தக்க வைத்தும் நிகழ்காலத் தகவல்களை அவ்வப்போது கொடுத்தும் வருங்காலத்திற்கு வேண்டியவற்றை உருவாக்கியும் கணினி செயல்படுவதால் கண்ணினும் மேலாகப் போற்றப்படுகிறது.

**கணினியின் தோற்றம்:**

கணினியின் முன்னோடி எனப்படுவது அபேக்ஸ் எனப்படும் சீனர்களின் அறிவியல் சாதனமாகும். மின்னணுக் கணினியை டாக்டர் ஆலன் எம். டூரிங் 1824 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். ஹார்வர்டு பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஹோவண்ட் தற்போதைய கணினியை வடிவமைத்தார். சூப்பர் கணினியை 1976 - ஆம் ஆண்டு அமெரிக்கரான வான்டேஸஸ் உருவமைத்தார்.

**இணையதள வசதி:**

இணையதளத்தின் மூலம் உலகின் மறுகோடியில் உள்ளவரிடமும் சில நொடிகளில் தொடர்பு கொள்ள முடிகிறது. மின் அஞ்சல் அனுப்பவும் நேரில் உரையாடுவதைப் போன்று உரையாடவும் பயன்படுகிறது.

**பயன்படும் துறைகள்:**

வானூர்தி, ஏவுகணை, இராக்கெட், கப்பல்கள், வேளாண் கருவிகள், வானிலை அறிவுப்பு, வணிகம் போன்று பல்வேறு துறைகளில் பயன்படுகிறது.

**முடிவுரை:**

கணினி வாழ்க்கையின் உயிர்நாடியாகி விட்டதால் கணினியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தி வாழ்க்கையில் உயர்வோம். கணினி சார்ந்த வேலைவாய்ப்புகள் இன்று பல்கிப் பெருகி உள்ளதால் கணினி வழிக்கல்வியை நன்கு கற்போம்.

## 2. சுற்றுச்சூழல் நிலை

**முன்னுரை:**

தூய நீர், காற்று, நிலம், ஒலி மாசடைவதால் நாள்தோறும் புதுப்புது நோய்களுக்கும், பேரிடர்களுக்கும் ஆளாகின்றோம். இதனைத் தவிர்க்க சுற்றுச் சூழலைப் பாதுகாத்திட வேண்டும்.

www.nammakalvi.com



### காற்று, நீர், நிலம் மாசுபடுதல்:

தொழிற்சாலைகள் கக்கும் கரும்புகை காற்றுடன் கலப்பதால் காற்று வெளி மாசடைகிறது. இந்திய நாட்டில் பாயும் ஆறுகளில் 70% கழிவுகள் சேர்ந்த கலப்பட நீராக உள்ளது. எரிபொருளுக்காக காடுகள் அழிக்கப்படுவதால் மழை குன்றி மண்வளம் குறைந்து நிலங்கள் பாலை வனங்களாக மாறுகின்றன. தொழிற்சாலைகள் வெளியிடும் இரசாயனக் கழிவுகளால் நீர் மாசுபடுவது கண்கூடாகத் தெரிகிறது.

### மாசுக்கட்டுப்பாடு:

கழிவுகளைக் குறைத்தல், திரும்பப் பயன்படுத்துதல், பிறிதொன்றாக மாற்றல் முறையில் மாசுக்கட்டுப்பாடு செய்தல் வேண்டும்.

### மாணவர் பங்கு :

மாணவர்களாகிய நாம் இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வுக்கு நம்மை ஆயத்தம் செய்து கொள்வோம். பள்ளியில், வீடுகளில், சாலை ஓரங்களில் மரங்கள் நடுவோம். சிறு சிறு தடுப்பணைகள் கட்டி மழை நீரைச் சேமிப்போம்,

### முடிவுரை:

“பசுமை எங்கோ வளமை அங்கே” என்பதைப் போல சூழலைப் பாதுகாத்து சுகமாக வாழ்வோம்.

## 3. பெண் கல்வி

### முன்னுரை:

தமிழ்ச் சமுகாயத்தில் நன்மதிப்புப் பெற்றிருந்த பெண்களைப் பிற்காலத்தில் வீட்டிற்குள் முடக்கி வைத்தனர். நாட்டு விடுதலைக்குப் போராடிய பெண்களில் பலர் சமூக விடுதலைக்குப் போராடினர்.

### பெண்ணுரிமை:

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பலர். ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தார் பெரியார். பெண்கள் தம் கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இராமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாக மாற வேண்டும்.

### பெண்கல்வி:

பெண்கள் முன்னேற்றத்திற்கு பெருந்தடை வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே என்று பெரியார் போன்றோர் கருதினர். நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததாகும்.

www.nammakalvi.com



**சமுதாயத்தில் பெண்கள் நிலை:**

பகுத்தறிவற்ற சீவன்களாய்ப் பெண்களை வைத்திருக்கும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும். அரசியல், நீதித்துறை, காவல்துறை, இராணுவம் போன்ற பல துறைகளில் பெண்கள் மிளிர்ந்தாலும் பல நிலைகளில் ஆண்களைச் சார்ந்தே இருக்க வேண்டி உள்ளது. "பெண்கள் சமூகத்தின் கண்கள்'' என்று கூறும் நிலை உருவாக வேண்டும்.

**சொத்துரிமை:**

பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்து விட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லா வகையான அடிமைத்தனங்களும் ஒழிந்து போகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். பெண்களுக்குச் சொத்துரிமை தற்போது கிடைத்து உள்ளதால் ஒரளவு பெண்கள் நிலை உயர்ந்துள்ளது.

**மணக்கொடை:**

தமிழகத்தில் பெற்றோர் பலர் தம் மகனின் கல்விக்காகச் செலவழித்த பணம், தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகக் கருதிக் கொண்டு அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர்.

சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால் தான் இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.

**பெண்கல்வியால் ஏற்படும் மாற்றங்கள்:**

கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளும் நிலை இன்று உருவாகி உள்ளது. பெண்களும் ஆண்களைப் போல் அரசுப் பணிகளில் இன்று அமர்ந்துள்ளனர். பெண்களுக்கு இன்று சொத்துரிமை கிடைத்துள்ளது. கற்பென்பது ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவானது என்ற கருத்து பரவி உள்ளது.

**முடிவுரை:**

பெண் கல்வியினால் இன்று சமுதாயத்தில் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் பெண்களின் நிலை மேம்படும் என உறுதி ஏற்போம்.

## 4. சேமிப்பு

***ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை***
***போகாறு அகலாக் கடை*** – ***திருக்குறள்***

துன்பத்தைத் துரத்தி, இன்பத்தைத் துய்த்து அறத்தைப் போற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ பொருள் அவசியம். பொருளின் தேவை உணர்ந்து அதை நாம் சேமிக்கும் பழக்கத்தையும் பெறுதல் வேண்டும். அத்தகைய சேமிப்பின் சிறப்பை இக்கட்டுரை வாயிலாகக் காண்போம்.

www.nammakalvi.com



**சேமிப்பு:**

அன்றாடத் தேவை, அவசரத் தேவை, எதிர்காலத் தேவை - இந்தத் தேவைகளை நிறைவு செய்ய சேமிப்பே வகை செய்கின்றது. பாடுபட்டுப் பொருள் தேடுகின்ற காலத்திலே சேமிப்பு மிகவும் தேவையாகிறது.

**சிக்கனத்தைப் பற்றிய பழமொழிகள்:**

- அஞ்சலக மாதாந்திர சேமிப்பு
- ஆயுள் காப்பீட்டுச் சேமிப்பு
- வங்கிகளில் சேமிப்புத் திட்டம்.

முதலியவை சேமிப்பு வழிகளாக இருக்கின்றன. இப்பொழுது மக்கள் பங்குச் சந்தை சார்ந்த (மியூச்சுவல்) பண்ட் மற்றும் லாபகரமான பங்குகளை வாங்கியும் சேமிக்கின்றனர்.

**சேமிப்புன் பயன்கள்:**

வரவுக்கு ஏற்ப செலவு செய்து வரவில் ஒரு பகுதியைச் சேமித்தோமானால் எதிர்பாராத வகையில் ஏற்படும் செலவுகளைச் சமாளிக்கலாம். வருங்காலத்தில் மேற்படிப்பிற்கும் திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கும் சேமிப்பு அவசியமாக அமைகிறது.

**முடிவுரை:**

மாணாக்கர்கள் தம் இளமைப் பருவத்திலேயே சேமிக்கும் பழக்கத்தை வளர்த்தால் தாமும் வளம் பெற்று நாட்டையும் வளம்பெறச் செய்யலாம்.

**“சிக்கனம் வீட்டைக் காக்கும்”**
**“சேமிப்பு நாட்டைக் காக்கும்”.**

## 5. நூலகம்

**முன்னுரை:**

**“ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்**
**நூலகம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்”**

என்பதனைப் போல அறிவை வளர்க்கும் இடமான நூலகம் ஊர்தோறும் தெருதோறும் பள்ளிதோறும் இருக்க வேண்டும்.

“நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு” என்று ஔவையார் கூறுவதைப் போல் நாம் எவ்வளவு படிக்கிறோமோ அந்த அளவிற்கு நமது அறிவு வளரும்.

**பள்ளி நூலகம்:**

மொழிக்கல்வியின் ஒரு கருவூலமே பள்ளி நூலகம்தான். கற்பனைக் கதைகள், புராணக் கதைகள், சிறுகதைகள், அறிவியல் உண்மைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் என பள்ளி நூலகத்தில் உள்ள பலதரப்பட்ட புத்தகங்களை எடுத்து மாணவர்கள் பயனுள்ள வகையில் வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கம் மூலமே பல தலைவர்கள் தங்களது அறிவை

www.nammakalvi.com



மேம்படுத்தியுள்ளனர். தேவைக்கேற்ப புதிய புதிய புத்தங்களை நூலகத்தில் வாங்கி படிக்கப் பழக்க வேண்டும்.

**பொது நூலகம்:**

தமிழக அரசுதான் இந்தியாவிலேயே முதன்முறையாக 1948 - ஆம் ஆண்டு சென்னைப் பொது நூலகச் சட்டத்தை இயற்றி நூலகப் பணிகளின் சீரான செயல்பாட்டிற்கு வித்திட்டது. "ஊர்தோறும் நூலகம்" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழக பொது நூலகத்துறை செயல்படுகிறது.

**பயன்கள்:**

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களும் அதிக விலையுள்ள நூல்களைச் செலவின்றி படிக்க உதவுவது நூலகமே. இன்று போட்டித் தேர்வுகளுக்கும் பேச்சு, கட்டுரை, கவிதை, வினாடி - வினா போட்டிகளுக்கு தயாரிப்பதற்கும் நூலகமே சிறந்த கருவியாகும். ஒரு புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமம். மனிதனின் கண்டுபிடிப்புகளில் மிகச்சிறந்தது புத்தகம் தான். ஒருவன் புத்தகங்களைப் படித்து புதிய விசயங்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதை விட பிறவாமல் இருப்பதே நல்லது என்கிறார் சர்ச்சில்.

**வாசிப்போம் நேசிப்போம்:**

அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு என்பது பாரதிதாசனின் வெறும் பாடல் வரிகளல்ல. மாணவர்களுக்கான வேதவாக்கு கைபேசி, இணையம், முகநூல், கட்செவி அஞ்சல் போன்றவற்றில் தங்களின் நேரத்தை பலர் அதிகளவில் வீணாக்குவதால் வாசிக்கும் பழக்கம் மிகவும் குறைந்துள்ளது. செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் சாதாரண தளம் தான் சமூக வலைதளங்கள். அறிவை வளர்ப்பதற்கு நூலகங்களே தகுந்த இடமாகும்.

**முடிவுரை:**

"அமைதியோடு மதி வளர்க்கும் இடம். பண்பாடு போதிக்கும் பயனுள்ள இடம். விலை மதிப்பில்லாத நூல்கள் வசிப்பிடம், புரட்ட புரட்ட புத்தியை வழங்குமிடம். அரசுப் பணி ஆட்சிப்பணி கிடைக்குமிடம். கடன் கேட்காத நல்ல நண்பன் வாழுமிடம்" என்பதற்கேற்ப நூலகம் செல்வோம். வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்.

www.nammakalvi.com



# தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு

## தமிழ் முதல் தாள்

**(செய்யுள், உரைநடை)**

வகுப்பு: 9

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள்: 60

### I. பலவுள் தெரிக. 5 × ½ = 2½

1. ஓரறிவு, மூவறிவு, ஐந்தறிவு - இவ்வரிசைக்கான எடுத்துக்காட்டு எவை?
   அ) நத்தை, எறும்பு, தும்பி ஆ) நத்தை, மரம், பறவை
   இ) மரம், எறும்பு, பறவை ஈ) எறும்பு, தும்பி, நண்டு

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.
   அ) சிறுபஞ்ச மூலம் - 1. காப்பிய இலக்கியம்
   ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
   இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
   ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்
   i) அ-3 ஆ-4 இ-1 ஈ-2 ii) அ-2 ஆ-3 இ-1 ஈ-4
   iii) அ-3 ஆ-1 இ-4 ஈ-2 iv) அ-4 ஆ-1 இ-2 ஈ-3

3. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று ............
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

4. "சீவக சிந்தாமணி" - நூலுக்குரிய வேறு பெயர் யாது?
   அ) பொதுமறை ஆ) மண நூல்
   இ) குடிமக்கள் காப்பியம் ஈ) தமிழ்மொழியின் உபநிடதம்

5. 'யா' மரம் எந்த நிலத்தில் வளரும்?
   அ) பாலை ஆ) நெய்தல் இ) குறிஞ்சி ஈ) மருதம்

### II கோடிட்ட இடங்களை நிரப்புக. 5 × ½ = 2½

6. சனி நீராடு என்பது ............ புலவரின் வாக்கு.
7. இந்திய விண்வெளி ஆய்வுத் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ............
8. காஞ்சி என்றால் ............ என்பது பொருள்.
9. அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறும் நூல் ............
10. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட எட்டுத்தொகை நூல் ............

www.nammakalvi.com



**III பொருத்துக.** 4 × ½ = 2

| | | | |
|---|---|---|---|
| 11. | மூவலூர் இராமாமிர்தம் | - | நாட்டின் முதல் பெண் ஆசிரியர் |
| 12. | முத்துலெட்சுமி அம்மையார் | - | சமூகத் தன்னார்வலர் |
| 13. | சாவிதித்திரிபாய் பூலே | - | தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் |
| 14. | பண்டித ரமாபாய் | - | தேவதாசி ஒழிப்புச்சட்டம் |

**IV எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி.** 8 × 1½ = 12

15. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
16. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’’ - குறிப்புத் தருக.
17. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
18. கமுகு மரம் எதைத் தேடியது?
19. “குறுந்தொகை’’ - பெயர்க்காரணம் கூறுக.
20. “கூவல்’’ என்று அழைக்கப்படுவது எது?
21. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்களில் எவையேனும் ஐந்தினை எழுதுக.
22. “செப்புத் திருமேனிகள்’’ பற்றிக் குறிப்பு வரைக.
23. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.
24. பகுத்தறிவு என்றால் என்ன?

**V எவையேனும் ஐந்தனுக்கு ஆறு வரிகளில் விடையளி.** 5 x 3 = 15

25. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
26. என் சமகாலத் தோழர்களே கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
27. விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
28. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?
29. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை விவரி.
30. “அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை’’- அதற்கு நாம் செய்ய வேண்டியவை யாவை?
31. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

**VI பாடலின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளி.** 1 × 2 = 2

32. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரில்லாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!

www.nammakalvi.com



**வினாக்கள் :**

அ) இவ்வடிகள் அமைந்த பாடலை எழுதியவர் யார்?

ஆ) அகமாகவும் புறமாகவும் அமைந்தவை எவை?

இ) நீங்கள் அறிந்த காப்பியம் ஒன்றன் பெயரை எழுதுக.

ஈ) தமிழ் எப்போது பிறந்ததாகக் கவிஞர் கூறுகிறார்?

**VII பதினைந்து வரிகளில் விரிவான விடையளி.** 2 × 4 = 8

33. பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

34. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

**(அல்லது)**

தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை சிற்பக்கலை வாயிலாய் நிறுவுக.

**VIII பதினைந்து வரிகளில் விரிவான விடையளி.** 2 + 2 + 2 = 6

35. “அள்ளற்” என்று தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடலை எழுதுக.

36. “பூவாது” என்று தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

37. “சுழன்றும்” என்று தொடங்கும் குறளை எழுதுக.

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



# தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு

## தமிழ் இரண்டாம் தாள்

### (துணைப்பாடம், இலக்கணம், மொழித்திறன்)

வகுப்பு: 9

நேரம் : 2.30 மணி | மதிப்பெண்கள்: 60

**I பலவுள் தெரிக.** 10 × ½ = 5

1. பெயர்ப் பயனிலைக்கு ஏற்ற தொடர் எது?
   அ) எழுதினான் அமலன் ஆ) அமலன் எழுதினான்
   இ) அமலனுக்கு எழுதினான் ஈ) எழுதியது அமலனா?

2. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.
   அ) 'ஆ' - என்பது எதிர்மறை இடைநிலை
   ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது - அண்ணாவின் மேடைப் பேச்சு
   இ) வில்லுப்பாட்டு: ஓர் இலக்கிய வடிவம்.
   i) அ, இ - சரி, அ - தவறு ii) அ, இ - சரி, ஆ - தவறு
   iii) மூன்றும் சரி iv) மூன்றும் தவறு

3. "கழல் பணிந்தான்" - இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ................
   அ) சொல்லாகு பெயர் ஆ) தானியாகு பெயர்
   இ) இடவாகு பெயர் ஈ) காரியவாகு பெயர்

4. "மாட்சி" என்பது ................
   அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
   இ) பண்புப் பெயர் ஈ) உரிச்சொல்

5. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை
   - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?
   அ) சொல்பின்வரு நிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
   இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

6. பாதிரி ஒத்த பூ, செய் கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக.
   அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை
   இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) வினைத்தொகை உருவகம்

7. மரவேர் என்பது ................ புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

8. "திருவளர் செல்வன்" - இங்கு வல்லினம் மிகாமைக்குக் காரணம் ................
   அ) விளித்தொடரில் மிகாது ஆ) வினைத்தொகையில் மிகாது
   இ) எழுவாய்த்தொடரில் மிகாது ஈ) பெயரெச்சத்தில் மிகாது

9. கலையரசன் நல்ல நண்பன் - இத்தொடரில் "நல்ல" என்பது ................
   அ) வினையடை ஆ) பெயரடை
   இ) முதல் வினை ஈ) துணை வினை

www.nammakalvi.com



10. "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" இக்குறளின் ஈற்றுச்சீரின் வாய்பாடு யாது?
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

**II சுருக்கமாக விடை தருக.** 10 × ½ = 5

11. சுட்டெழுத்துக்குப் பின் வல்லினம் மிகும் என்பதற்கு சான்று தருக.
12. *உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக:* நான் திருச்சி சென்றேன். (ஐ, கு, ஆல்)
13. *செயப்பாட்டு வினைத்தொடராக்குக:* வேலன் பொம்மை செய்தான்.
14. *பழமொழியைச் சொற்றொடரில் அமைத்திடுக:*
கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.
15. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:*
டெய்லி நான் பயன்படுத்தும் எலக்ட்ரானிக் கருவிகளுள் முதன்மையானது செல்போன்.
16. *சொல்லுக்குள் சொல் தேடுக:* அ) கடையெழு வள்ளல்கள் ஆ) எடுப்பார் கைப்பிள்ளை
17. *பிழை நீக்கி எழுதுக:*
சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பித்தான்.
18. *சொற்களைத் தொடர்களாக மாற்றுக:*
இயங்கு – தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக.
19. *சொற்றொடரை விரிவாக்குக:*
விளையாடுவது நன்று. (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)
20. *மரபுப்பிழை நீக்கி எழுதுக:* கோழிக்குட்டிகளைப் பிடிக்க பூனைக்குஞ்சுகள் ஓடின.

**III சுருக்கமாக ஓரிரு வரிகளில் (ஐந்தனுக்கு மட்டும்) விடை தருக.** 5 × 2 = 10

21. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
22. பண்பாகுபெயரை விளக்குக.
23. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
24. "செய்யாதே" – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.
26. "மணியழகு" – பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
27. பின்வருவனவற்றில் வல்லினம் மிகலாமா?
அ) தை பூசம் ஆ) கிளி பேச்சு இ) கூடகொடு ஈ) தமிழ்தேன்

**IV எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 x 3 = 6

28. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார் – அலகிட்டு வாய்பாடு தருக.
29. வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக:
கமலா நேற்றுப் பள்ளிக்குச் ................ (செல்) தன் தோழிகளைக் ................ (காண்) மகிழ்ச்சியுடன் ................ (உரை). பின்னர் வங்கிக்குப் ................ (போ) தான் கூடுதலாகச் ................ (செலுத்து) தொகையைத் தரும் ................ (பெறு) ................ (கொள்) வந்தாள்.
30. தமிழெண்களில் எழுது.
அ) உன் வகுப்பு மாணவர் எண்ணிக்கை ................
ஆ) தமிழில் உயிரெழுத்துகள் ................
இ) திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் ................

www.nammakalvi.com



ஈ) வாக்களிக்கும் உரிமை வயது ................

உ) தமிழ்மொழியில் உள்ள மொத்த எழுத்துகள் ................

ஊ) தமிழிலக்கணம் ................ வகைப்படும்.

**V எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 x 4 = 8

31. நூலகம், நூல்கள் குறித்த அண்ணாவின் கருத்துகள் யாவை?
32. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்கள் யாவை?
33. நா.முத்துக்குமார் தன் மகனுக்கு எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**VI நயம் பாராட்டுக.** 4 × 3 = 12

34. வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே!

35. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



36. மொழி பெயர்த்திடுக.
அ) An Early Morning walk is a a blessing for the whole day.
ஆ) The art of people is a true mirror to their minds.
இ) The biggest problem is the lack of love and charity.

37. கவிதை எழுதுக: பள்ளி (அல்லது) நட்பு

**VII ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 x 7 = 7

38. உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெற இருக்கும் உலகத் தாய்மொழி நாள் விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை வடிவமைக்க.

**(அல்லது)**

"எனது பயணம்'' என்ற தலைப்பில் உனது பயண அனுபவங்களை வருணித்து எழுதுக.

**VIII. ஏதேனும் ஒன்றனுக்கு குறிப்புகளைக் கொண்டு விடையளி.** 1 x 7 = 7

39. நீரின்றி அமையாது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர் நிலைகள் - நீர்ப்பற்றாக்குறை - நீரைச்சேமித்தல் - நிலத்தடி நீர்மட்டம்.

**(அல்லது)**

முன்னுரை - ஆழிப்பேரலை - சுனாமியின் விளைவு - பாதுகாப்பு - சிறப்புப் பயிற்சி - முடிவுரை.